


'அழகன் வீரச் சாவடைந்துவிட்டான்' இதயத்தை ஊடுருவி அசைத்து ஆட்டிப் பார்க்கும் செய்தி.

அவன் சிரித்த முகத்துடன் அலையும் வீதிகள் வெறிச்சோடிப் போய்க் கிடந்தன.

'உண்மையாகவா' அவ் வீதிகளின் வழியே அவனைப் பார்த்ததும் அழகன் மாமா என்று மகிழ்ச்சியுடன் கையசைக்கும் சின்னஞ்சிறிசுகள் ஏக்கத்துடன் நின்றனர்.

ஈழநாதத்தின் வாசல் .... அவர்கள் அனைவரும் அழுதபடி... அவர்களால் இவனின் இழப்பை எப்படித் தாங்கமுடியும்? முடியாது. அழட்டும் நன்றாக அழட்டும். இதயத்தின் ஈரம் காயும் மட்டும் அழட்டும்.

போராளிகளின் உடல்களைப் பக்குவப்படுத்தும் இடம்.

அழகன் கட்டிலில் படுத்துக் கிடந்தான். வழமை மாதிரியே கைகளை அகலப் போட்டபடி சாதுவான சிரிப்புடன்.... அவன் சாவைச் சந்தித்துவிட்டானா? யார் சொன்னது? அவனது வயிற்றில் இருந்த சிறிய காயத்தால் இரத்தம் கூட வழியாத நிலையில் ... அவன் சாவை அணைத்துவிட்டானா?

"அழகன் டே... அழகன்.." தோழனொருவன் அவனது கன்னத்தில் தட்டிவிட்டு அழுதான். காற்றில் கலந்த சோகம் உலகின் அசைவுகளை அப்படியே நிறுத்தி இருந்தன.

இவனது இழப்பை வீதிகளில் நின்று கையசைக்கும் அந்தச் சின்னஞ் சிறுசுகளும் இவனை அன்புடன் நேசித்த இந்த தேசத்தின் மக்களும்.

சிறிய விபத்தோன்றில் இவனது தம்பியை முன்னமே இழந்துவிட்ட இவனது தாயும் தந்தையும், தங்கள் சகோதரனில் உயிரையே வைத்திருக்கும் சகோதரிகளும் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறார்கள்.

அதைவிட
இவனுக்காகவே காத்திருக்கும் இவனின் அவள்... இவனின் இழப்பை எப்படித்.....

அவள் மட்டுமா? எத்தனை வேலையென்றாலும் அழகனைத் தேடும் இவனது தோழர்கள்...

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது.

* * * *

அழகன்
முல்லை மண்ணின் குழந்தைகளில் அவனும் ஒருவன். அந்த மண்ணின் உயிரில் கலந்து அங்கு வாழும் மக்களின் இதயங்களில் குடிசை கட்டி வாழ்ந்தவன்.

தண்ணீரூற்றுப் பகுதிக்கு அரசியல் வேலை செய்வதற்கு வரும் பொழுது அழகன் சின்னப் போராளி. இவனுக்கு அழகன் என்ற பொருத்தமான பெயரை யார் வைத்தார்கள் ? இந்தக் கேள்வியை அந்தக் கிராமத்தில் யார்தான் கேட்கவில்லை.

'இந்தத் தேசம் விடுதலை பெற வேண்டும்' என்று அந்தக் கிராமங்களில் இந்தக் குயில் குரலெடுத்துப் பாடத் தொடங்கியது. ஒரு வருடம் கடந்தபொழுது அழகன் அந்தக் கிராமத்தின் செல்லக் குழந்தையாக மாறிவிட்டான். அவனுக்குப் பின்னால் 'சுதந்திரம் எங்கள் உயிர் மூச்சு ' என்று கொண்டே அப்பகுதி மக்கள் அணிவகுத்து நின்றனர்.

அந்த இனிய நாட்கள்தான் எப்படிப்பட்டதென்று பாருங்களேன்! ஒரு மிதி வண்டியில் மடித்துக் கட்டாத சாரத்துடன் நிற்கும் அழகன்னைப் பார்த்து ' அழகன் மாமா ... போட்டுவாறம் ' என்றுகொண்டே பாடசாலை செல்லும் சிறுவர் கூட்டம் காலையில் கடக்கும். சிறிது நேரம் சென்றபின் "தம்பி மத்தியானம் சாப்பாட்டுக்கு வாடா" என்று இவனது கன்னத்தை தடவிவிட்டுச் செல்லும் அம்மாமார். மாலையில் " தம்பி தலைவர் என்ன சொல்லுகிறார்" என்றபடியே அரசியல் கதைக்கும் அப்புமார். நேரம் என்று பாராமல் இவன் சொல்வதைச் செய்து கொண்டு திரிந்த இளைஞர்கள் என்று அழகன் யாரோடுதான் கலக்கவில்லை...

இராணுவ நடமாட்டம் அதிகமான நெருக்கடி மிகுந்த அந்த நாட்களில் அந்தக் கிராமங்களில் அழகன் விடுதலைப் பயிரை வளர்க்க முயன்றான். அந்நேரந்தான் அவர்களுக்குள் அன்பு முளைவிட்டது.

அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தை கவிந்திருந்த போர் மேகங்களின் விளைவாக நாவற்குழி இராணுவ முகாம் காவல் நிலைகளுக்கு அழகன் மாற்றப்பட்டான். காவல் நிலைகளின் ஒரு தொகுதிக்கு பொறுப்பாக இருந்த மேஜர் தாடிபாலாவின் குழுவில் அவனும் ஒருவனாக இருந்தான்.

அங்கும் பாலாவினதும் மற்றைய தோழர்களினது அன்புக்கும் அவன் விரைவிலேயே ஆளாகிப் போனான். பாலாவிற்கு அழகன் எப்போதும் அருகில் இருக்க வேண்டும் என்ற உணர்வு இதயத்தில் ஊறிப்போய் விட்டது.


அந்தப் போராளிகள் சிங்களப் படைகள் எந்த முனையால் முன்னேற முயன்றாலும் அங்கு நின்றனர். ஆக்கிரமிப்புவாதிகளின் முயற்சிகளை முறியடித்து இந்த மண்ணைக் காத்தனர். அப்போதெல்லாம் அழகன் ஓர் எறிகணை செலுத்தியை வைத்திருந்து சண்டையிட்டான்.

இந்திய-இலங்கை ஒப்பந்தமும் அதைத் தொடர்ந்து ஓர் போர் நிறுத்த காலமும் வந்தபொழுது அழகனை மாத்தையா அண்ணை தன்னுடன் அழைத்துச் சென்றிருந்தார். இந்தியர்களுடனான போர் தொடங்கும் வரைக்கும் பல்வேறுபட்ட அரசியல் வேலைகளை அழகன் செய்து கொண்டிருந்தான்.

இந்தியர்களுடனான போர் தமிழீழமெங்கும் எழுந்தபொழுது பல்வேறு பகுதிகளிலும் நின்று அழகன் போராடினான். அன்னிய ஆக்கிரமிப்புவாதிகளின் அராஜகத்திற்கு இந்த தேசம் அடிபணிந்து போகாது என இந்த மண் நிமிர்ந்து நின்று போராடியது. தென்மராட்சிப் பகுதியில் நின்று செயற்பட்ட அழகன் அதன்பின்பு வன்னிக்கு வரவழைக்கப்பட்டான்.

வன்னியில் மேஜர் தாடிபாலாவின் அணியில் ஒருவனாக நின்று போராட்டக் களத்தில் செயற்பட்டான். அக்காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக தொடங்கப்பட்ட பயிற்சி முகாம் ஒன்றின் பயிற்சி ஆசிரியராக அழகன் நியமிக்கப்பட்டான். இந்தியர்கள் இம்மண்மீது ஓர் போரினைத் தொடுத்தபின்பு தமிழீழ மண்ணில் நடத்தப்பட்ட புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் அதாகத்தான் இருந்தது.

அதன்பின்பாக வன்னிக் காடொன்றில் இயங்கிய அரசியல் தலைமையகத்திற்கு அழகன் மாற்றப்பட்டான். அந்த முகாமின் வெளித் தொடர்புகளை கவனிக்கும் பொறுப்பு அவனுடையதாக இருந்தது. அந்நேரங்களில் அக்காட்டு முகாமிலிருந்து வெளியிடப்பட்ட 'உணர்வு', 'சுதந்திரப் பறவைகள்' ஆகிய சஞ்சிகைகள் வெளிவரத் தேவையான கல்லச்சுத்தாள், மை போன்றவற்றைக் கொள்வனவு செய்து கொடுக்கும் பொறுப்பு அழகனிடம் இருந்தது.



**மேஜர் அழகன்**
(செல்வராசா இளங்கோ)
கல்வயல், சாவகச்சேரி.

வீரப்பிறப்பு: 13-01-1966
வீரச்சாவு : 29-06-1992

இவன்...
உயர்ந்ததோர் தலைமையின்
வழிகாட்டலில் வளர்ந்தவன்
எனவேதான்
இன்று
எல்லோருக்குமே வழிகாட்டியாய்...

அதன் தொடராகத் தான் இந்தியர்கள் வெளியேறத் தொடங்கியதும் ஈழநாதம் பத்திரிகையை நடத்தவேண்டிய பொறுப்பு அழகனிடம் ஒப்படைக்கப்பட்டது. உண்மையில் சொல்வதாக இருந்தால் என்ன? ஈழநாதம் முதலாவது இதழ் வெளிவந்த பொழுது குடாநாட்டின் பல இடங்களில் இந்தியர்கள் இருந்து கொண்டுதான் இருந்தார்கள்.

வன்னிமக்களால் அன்போடு 'எங்கட அழகன்' என்று அழைக்கப்பட்ட அவன் இப்போது ஈழநாதம் அழகனாக மாறியிருந்தான். பத்திரிகை உலகத்தில் புதியவனாய் புகுந்த அழகன் அதில் மிகவிரைவாகவே தேர்ச்சி பெற்றான்.

இரண்டு வருடங்கள் கடந்த பொழுது பத்திரிகை உலகில் சகல நுணுக்கங்களும் தெரிந்த தோர் சிறந்த நிர்வாகியாக: அவன் மாறியிருந்தான். ஒரு சில, வசதிவாய்ப்புகளுடன் தொடங்கிய ஈழநாதம் இன்று பெரிய தொரு நிறுவனமாக மாறி நிற்கின்றது.

இப்போதெல்லாம் அழகன் சிறியவனல்ல.... தேர்ச்சி நிறைந்த நிர்வாகி. எளிமையாக பெட்டிக் கடைகளிலும் பெரும் முதலாளிமார்களுக்கு முன்னாலும் இருந்து கதைப்பான். வியாபார உலகத்தின் அசைவுகளை அவன் கண்கள் நன்றாகவே அறியும்.

ஆனால் மறுகணம் போராளிகளுடன் போராளியாகவும் நிற்பான். ஆனையிறவில் நடக்கும் சமரில் காயமடையும் போராளிகளை குண்டு வீச்சு விமானங்களிற்கு இடையால் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் சாரதியாக மாறிப் போவான்.

"ஈழநாதம் அதன் வளர்ச்சி" இதுவே அவனது பேச்சும் மூச்சுமாகப் போனது. எந்த நெருக்கடிகள் வந்தாலும் ஈழநாதம் வெளிவர வேண்டும். இது அவனது இதயத்தின் ஆவல். குடாநாடு எங்கும் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தாலும் இயந்திரத்திற்கு அருகில் இவன் விழித்துக் கொண்டிருப்பான்.

ஈழநாதம் பணியாளர்களுக்கு அவன் ஓர் அண்ணன். அத்துடன் நிர்வாகப் பொறுப்பாளன். அவர்கள் ஓர் இனிய குடும்பம். விடுதலை உணர்வை விதைப்பது அவர்களின் கடமையாக இருந்தது.

அன்றும் அப்படித்தான் நடந்தது. புகைப்படம் எடுக்கும் தோழன் ஒருவனுடன் போர் முனைக்குச் செய்திகளை சேகரிக்கச் சென்ற அழகனுக்கு அருகாக வீழ்ந்த குண்டொன்றின் சிதறல் அழகனின் வயிற்றில் தைத்தது. அது சிறிய காயம் என்றுதான் அவனும் அவனது தோழர்களும் நினைத்தார்கள். ஆனால் ........ உடலின் உள்ளே அவனது உயிரை இவ்வளவு வேகமாகக் குடிக்கும் ஆழமான காயம் இருந்ததை யாரும் அறியவில்லை.

அழகன் சாவைச் சந்தித்துவிட்டானாம். யார் இந்தச் செய்தியை நம்புவார்கள்?

அழகனைச் சுமந்துகொண்டு அந்த வீதிகளில் வேகமாக ஓடும் அந்தச் சிவப்பு நிற வண்டி இன்றும் அவனைச் சுமந்துகொண்டு துயரத்தோடு மெதுவாக.......

இரவுகளில் அழகன் படுத்துறங்கும் ஈழநாதத்தின் முன்மண்டபம் அதில் இன்றும் அழகன் படுத்திருக்கிறான். அவன் சிரித்த முகத்தை பார்த்து மகிழ்பவர்கள் எல்லாம் இன்று கண்ணீரோடு.....

அழகா! உன் கண்களை அகல விரித்து ஒரு தரம் பார். உன்னைச் சுற்றி நின்று அழுபவர்கள் யார்?


அம்மா.... அப்பா உன் உறவுகள் மட்டுமா. உன் காதலியும் தோழர்களும் ஏன் இந்தத் தேசமும் உனக்காக கண்ணீர் வடிக்கிறார்கள். ■

## இராணுவ தோல்வி...

பட்டோர் சேவைப்புக்கு அறிவிப்பு ஏதும் இன்று திரும்பாதுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் சிறீலங்கா அரசு இராணுவப் புரட்சி ஏற்படலாம் என அஞ்சுகிறது. இதனை ஈடுசெய்து இராணுவத்தினரின் மனோநிலைச் சோர்வை போக்க வேண்டும் எனத் திட்டமிடும் சிறீலங்கா அரசு எப்படியும் யாழ் நகரைப் பிடிப்பதற்கான போர் ஒன்றைத் தொடங்கும்படி சிறீலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு உற்சாகமூட்டி வருகிறது. யாழ் நகர் சன அடர்த்தியும் அகதிகள் சனச் செறிவும் உள்ள பிரதேசமாக இருந்தபோதிலும் அதனைக் கருத்தில் எடுக்காது எப்படியென்றாலும் நாலைந்து கிலோ மீற்றர் ஆவது யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறக்கூடிய யுத்தம் ஒன்றை கனரக ஆயுதங்கள் கவச வண்டிகள் உதவியுடனும் பாரிய விமானத் தாக்குதல்களுடனும் நடாத்த வேண்டும் என சிறீலங்காப் பிதமர் படைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இதன் ஆரம்பக் கட்டமாக குடாநாட்டின் பல பகுதிகளில் குண்டு வீச்சுக்களையும் செல் அடிகளையும் சிறீலங்காப் பாதுகாப்புக்கள் படை நடாத்திவருகின்றன.

தெரிவுக்குழுவால் பிரச்சனைகளை மேலும் பரவலாக்க முடிந்ததே தவிர எவ்விதமான அதிகார பிரிவாக்கத்தையும் செய்ய இயலவில்லை. இந்நிலையில் பாராளுமன்ற தெரிவுக்குழு, சிங்கள அரசு எதுவும் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை ஒரு போதும் வழங்காதென்பதை மேலும் உறுதிசெய்துள்ளது. இதனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்ற மாயமானைக் காட்டி சர்வதேச மக்களை ஏமாற்றி வந்த சிறீலங்கா ஜனாதிபதி இராணுவத் தாக்குதல் மூலம் தீர்வைக் காணலாம் என பகற்கனவு காண்கிறார்.

அத்துடன் சிறீலங்கா அரசு, முஸ்லீம்களை தமிழீழ விடுதலைப் புலிகளே படுகொலை செய்தார்கள் என்ற முழுப் பொய்யான பிரச்சாரம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் சில முஸ்லீம் நாடுகளிடம் இருந்து பெருந்தொகையான பணத்தை முஸ்லீம்களின் புனர்வாழ்வுக்கென வாங்கி யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதற்கான ஆயுதங்களுக்கு பயன்படுத்தலாம் என சிறீலங்கா அரசு திட்டம் தீட்டியதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இதுவே முஸ்லீம்களின் படுகொலைக்கான அடிப்படையுமாகும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. தற்பொழுது யாழ் நகர் மீதான தாக்குதலை நடாத்தி அதை "புனிதப் போர்" என தன்னோடு சார்பான முஸ்லீம் கட்சிகளைக் கொண்டு பிரகடனப் படுத்த அரசு முயல்கிறது. இதன் வழியாக முஸ்லீம் நாடுகளிடம் இருந்து பெரும் தொகையான பணத்தை பெறலாம் என சிறீலங்கா அரசு திட்டமிடுகிறதென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். ■




சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா இராணுவத் தீர்வென்றும் அரசியல் தீர்வென்றும் இரட்டை வேடம் போடுவதை விளக்கும் கேலிச் சித்திரம்.